—

## இந்திய உயர் ஸ்தானிகராலயம்

## கொழும்பு

************

ஊடக அறிக்கை

இலங்கைக்கு ஒரு தொகுதி மருத்துவ கையுறைகளை வழங்கிய இந்தியா

கொவிட் – 19 நோயினை எதிர்கொள்வதற்காக இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளின் தொடர்ச்சியாக ஒரு தொகுதி மருத்துவ கையுறைகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் இலங்கை அரசாங்கத்திடம் இன்று கையளிக்கப்பட்டுள்ளது . முன்னதாக, 2020 ஏப்ரல் 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் 13 தொன்கள் உயிர்காக்கும் அத்தியாவசிய பொருட்கள் இந்தியாவால் இலங்கைக்கு கையளிக்கப்பட்டன.

2020 மார்ச் 15 ஆம் திகதியன்று இடம்பெற்ற சார்க் தலைவர்களின் வீடியோ மாநாட்டின் போது , அயல் நாடுகளின் அவசர உதவி பணியாளர்களுக்கு கொவிட் - 19 ஐ கையாள்வதற்கான முயற்சிகளுக்கு உதவுவதற்காக இந்தியா இணைய மூலமான பயிற்சிகளை வழங்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது . அதனடிப்படையில், இந்திய வெளியுறவு அமைச்சு , கொவிட் - 19 முகாமைத்துவ உத்திகள் மற்றும் தொடர்புடைய அம்சங்கள் குறித்து சுகாதார நிபுணர்களுக்காக e-ITEC குறுகிய பயிற்சிகளை இணையம் மூலமாக நடத்துகிறது. அதன் முதலாவது இணைய அமர்வு ( Webinar ) “ சுகாதார பராமரிப்பு நிபுணர்களுக்கான கொவிட் - 19 தடுப்பு மற்றும் முகாமைத்துவ வழிகாட்டுதல்கள் ” என்ற தொனிப்பொருளில் 2020 ஏப்ரல் 17 முதல் 21 வரை ராய்ப்பூரில் உள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது . அதில் இலங்கை சுகாதார அமைச்சின் 11 மருத்துவ அதிகாரிகள் பங்கேற்றனர் . இரண்டாவது இணையவழி ITEC பயிற்சி " கொவிட் 19 ஐ கையாள்வதில் இந்தியாவின் அனுபவம் மற்றும் சிறந்த நடைமுறைகள் " என்ற தலைப்பில் சண்டிகரில் உள்ள மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தால் ஏப்ரல் 27 முதல் 2020 மே 1 வரை நடத்தப்படுகிறது . எதிர்வரும் நாட்களிலும் இவ்வாறான பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இந்த நெருக்கடியான காலப்பகுதியில் தனது வளங்களையும் நிபுணத்துவத்தையும் அயல்நாடுகளுடனும் நட்புநாடுகளுடனும் தொடர்ந்து பகிர்ந்துகொள்வதற்கு இந்தியா உறுதியாக உள்ளது.

***************

கொழும்பு

27 ஏப்ரல் 2020